**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 53/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**3 |
| Name | : | **பாலமுருகன்** |
| Father's / Husband Name | : | **கந்தசாமி** |
| Address | : | தெற்கு தெரு, செல்லியம்பாளையம், பெரம்பலூர். |
| Age | : | 25/2026 |

**<u>தேதி : 25.02.2026</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ச. மோகனபிரியா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **<u>எதிரிகள் ஆஜர்.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 1 வருடத்திற்கு முன்பாக தேதி, மாதம் எனக்கு நினைவில்லை. பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் வைத்து போலீஸார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. என்னுடன் ராஜா என்பவர் கையெழுத்து செய்தார். என் முன்னிலையில் யாரையும் கைது செய்யவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை. என் முன்னிலையில் எந்த பொருளையும் என் முன்பாக கைப்பற்றவில்லை. **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வைத்த கோரிக்கையை ஏற்று சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீஸார் தன்னை விசாரித்ததாக கடந்த 10.01.2025ம் தேதி காலை 10.00 மணிக்கு போலீஸார் இவ்வழக்கின் எதிரி டால்டா கண்ணன் (எ) ராஜூ கைது செய்திருப்பதாகவும், தங்கள் முன்னிலையில் எவ்வித அச்சுறுத்தலும், துன்புறுத்தலும், ஆசை வார்த்தையுமின்றி ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியதாகவும், அதில் நானும், ராஜாவும் கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.